பிள்ளையந்தாதி

ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிகன் திருக்குமாரர் ஸ்ரீ நயினாசாரியார் அருளிச்செய்த

பிள்ளையந்தாதி

தனியன்

சீரார் தூப்புல் பிள்ளை அந்தாதி என்று செழுந்தமிழால்
நேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ்மொழிந்தான்
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்த் இவ்வுலகு உய்யவே
சீராகிய வரதாரியன்* பாதம் துணை நமக்கே.

1##
மாமலர் மன்னிய மங்கை* மகிழ்ந்துறை மார்பினந்தாள் *
தூமலர் சூடிய தொல்லருள் * மாறன் துணையடிக்கீழ் –
வாழ்வை உகக்கும் * இராமானுசமுனி வண்மைபோற்றும் –
சீர்மையன் * எங்கள் தூப்புல் பிள்ளைபாதமென் சென்னியதே. (2)

2:
சென்னி வணங்கச்* சிறுபனி சோர வெங்கண்ணிணைகள் *
வெந்நரகங்களும் வீய, வியன்கதி இன்பமேவத் *
துன்னு புகழுடைத் தூப்புல் துரந்தரன் தூமலர்த் தாள் –
மன்னிய * நாள்களும் ஆகுங்கொல் * மாநிலத்தீர் நமக்கே.

3:
மாநிலத் தோதிய * மாமறை மன்னிய நற்கலைகள் *
ஆனவை செய்யும் அரும்பொருள் அத்தனையே அருளும் *
தூநெறி காட்டும் இராமானுசமுனித் தோத்திரஞ்செய் *
ஊனமில் தூப்புலைய்யன் * ஓர் புகழின்றி உய்வில்லையே.

4:
உய்யும் வகையில்லை * உத்தர வேதியுள் வந்துதித்த *
செய்யவண் மேவிய சீர் அருளாளரைச் * சிந்தைசெய்யும்
மெய்யவன் எந்தை * இராமானுசனருள் மேவிவாழும்
ஐயன் * இலங்கு தூப்புல் பிள்ளை ஆய்ந்த பொருளன்றியே.

5:
அன்று இவ்வுலகினை ஆக்கி * அரும்பொருள் நூல்விரித்து *
நின்றுதன் நீள்புகழ் வேங்கட மாமலை மேவி * பின்
வென்றிப் புகழ்த் திருவேங்கட நாதனென்னும் குருவாய் *
நின்று நிகழ்ந்து * மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே.

6:
வித்தகன் வேதியன் * வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல் *
மெய்த்தவன் உத்தமன் வேங்கட நாதன் வியன் கலைகள் *
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலமறக் *
கைத்தவன் என்றுரைத்தேன் * கண்டிலேன் என் கடுவினையே.

7:
வினைகாள் உமக்கு * இனி வேறோர் இடந்தேட வேண்டும் *
எனைச் சினமேவி முன்போல் சிதைக்கும் வகையிங்குஅரிது கண்டீர்*
என் எனில் இராமானுசமுனி இன்னுரை சேரும் * தூப்புல்
புனிதர் * என்புந்தி புகுந்து திகழ்ந்து பொருந்தினரே.

8:
பொருந்திப் புவிதனில் * பொய்வாழ்க்கை பூண்கின்ற பூரியர்காள் *
இருந்து நரகின் இடர்கெடு மாற்றை அறிகின்றிலீர் *
பொருந்தும் பொருளொன்று கேளீர் * பொங்கும்மிவ் இடர்க்கடற்கு –
வருந்தாது * தூப்புல் மா புருடன் பாதம் வணங்குமினே.

9:
வணக்கம் ஒடுக்கம் * வழக்கம் ஒழுக்கம் இரக்கம் சேரும் *
இணக்கம் உறக்கம் இழுக்கும் அழுக்கும் மிகந்து நிற்கும் *
குணக் குலமோங்கும் இராமானுசன் குணங் கூறும் * தூப்புல்–
அணுக்கனைப் பிள்ளை தனை * அரணாக அடைபவர்க்கே.

10:
அடைபவர் தீவினை மாற்றி * அருள் தருந் தூப்புலையா *
இடர்தரும் இப்பிறவிக்கடல் தன்னில் அமிழ்ந்தவென்னைக் *
கடையறப் பாசங் கழற்றி நின் தாளிணைக் காணும் வண்ணம் *
உடையவனே அருளாய் * உணர்ந்தார் தங்கள் கற்பகமே.

11:
கற்பகமே என்று * காசினியோரைக் கதிக்கமாட்டேன் *
வெற்பிடையே நின்று வெந்தவத் தீயிலும் வேவமாட்டேன் *
பற்பல கலைவல்ல பாவலனே பத்தரேத்தும் தூப்புல் *
அற்புதனே அருளாய் * அடியேனுக்கு அரும்பொருளே.

12:
பொருளான தொன்றும்*என்னில் பொருந்தாததுமன்றி அந்தோ *
மருளே மிகுத்து மறையவர் நல்வழி மாற்றி நின்றேன் *
தெருளார் மறைமுடித் தேசிகனே * எங்கள் தூப்புல் தேவே –
அருளாய் * இனியெனக்கு உன்னருளே அன்றி ஆறில்லையே.

13:
ஆருக எண்ணும் * அருங்கருமம் ஞானம் காதல் கொண்டு *
வேருக நிற்கும் விரகெனக்கில்லை விரக்தியில்லை *

தேருது திண்மதி சீரார் கதியிலும் செம்பொன்மேனி *
மாருத தூப்புல் மாலே * மறவேன் இனி நின்பதமே.

14:
நின்பதம் தன்னிலும் * நேரே எனக்கில்லை அன்புகண்டாய் *
நின் பதம் ஒன்றிய அன்பரிலும் நேசமில்லை அந்தோ *
என்படி கண்டு இனியென் பயன் ஏதமில் தூப்புலெந்தாய் *
உன்படியே அருளாய் * உதவாய் எனக்கு உன்னருளே.

15:
உன்னருளன்றி * எனக்கொரு நற்றுணை இன்மையினால் *
என்னிரு வல்வினை நீயே விலக்கி இதங்கருதி *
மன்னிய நல் திருமந்திரம் ஓதும் பொருள் நிலையே *
பொன்னருளால் அருளாய் * புகழ் தூப்புல் குலவிளக்கே.

16:
விளக்காகி * வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள் *
வளக்காதல் கொண்டுறை மார்பன் திறத்தும் உனதடியார் *
துளக்காதல் இல்லவர் தங்கள் திறத்திலும் தூய்மை எண்ணிக் *
களக்காதல் செய்யும் நிலைகடியாய் * தூப்புல் காவலனே.

17:##
காவலர் எங்கள் * கிடாம்பிக் குலபதி அப்புளார்தம் *
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து * அவர் தம்மருளால்
நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற * நம்பிக்
காவலர் தூப்புல் குலத்தரசே * எம்மைக் காத்தருளே. (2)

18:
அருள்தரும் ஆரண தேசிகனே * எங்கள் தூப்புல் தேவே *
வரு கவி தார்க்கிக சிங்கமே * வாதியர் வாழ்வறுத்தாய் *
இருகையும் கூப்பி உரைக்கும் இவ்விண்ணப்பம் ஒன்றுகேளாய் *
உருவ எனக்கருளாய் * எண்ணுமுள்ளம் உன் தொண்டரையே.

19:##
தொண்டருகக்கும் துணையடி வாழி * நின் தூமுறுவல் –
கொண்ட முகம்வாழி * வாழி வியாக்கியா முத்திரைக்கை *
வண்திரு நாமமும் வாழி * மணிவட முப்புரிநூல் –
கொண்டசீர்த் தூப்புல் குலமணியே * வாழி நின்வடிவே. (2)

20:##
வடிவழகார்ந்த * வண் தூப்புல் வள்ளல் மென் மலரடிமேல் *
அடியவர் ஓத அந்தாதி இருபதும் ஆய்ந்துரைத்தேன் *
திடமுடன் ஈதைத் தினந்தொறும் ஆதரித்து ஓதுமன்பர் *
முடியிடை நேர்படும் * தூப்புலம்மான் பத மாமலரே. (2)

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.